# இயல் 6.9 - பின்னங்கள்

பயிற்சி எண் :: 6.9.1.4.I

பின்னங்கள் - கலப்பு பின்னங்கள் - பயிற்சி

## பின்னங்கள் - கலப்பு பின்னங்கள் - பயிற்சி

கதிரவன் ஒரு எண்ணைச்செக்கு வைத்து வியாபாரம் செய்து வந்தார். அவர் வாரத்திற்கு ஒரு முறை கடலை எண்ணெய் ஆட்டுவது வழக்கம். ஆட்டிவரும் எண்ணையை அடுத்த வார நாட்களில் விற்பனை செய்வார். கடந்த வாரம் அவர் $77\frac{1}{2}$ கிலோ கடலையை ஆட்டி எண்ணை எடுத்தார். கடலைக்கு 5:3 என்ற விகிதத்தில் எண்ணெய் கிடைப்பது வழக்கம். கடந்த வார வேலை நாட்களில் முறையே $3\frac{1}{4}$, $5\frac{1}{2}$, 8, $2\frac{1}{4}$, $6\frac{3}{4}$ மற்றும் $11\frac{1}{2}$ லிட்டர் கடலை எண்ணெய் விற்பனை ஆனது. எனில் வார இறுதியில் மீதியிருக்கும் எண்ணெய்யின் அளவு என்ன?

### விடைகாணும் படிகள்

1. கொடுக்கப்பட்டுள்ள விகிதத்தை உபயோகித்து கடந்த வாரம் அவர் ஆட்டிய கடலைக்கு எவ்வளவு எண்ணெய் கிடைத்திருக்கும் எனக் கணக்கிட வேண்டும்.
2. வார நாட்களில் விற்ற கடலை எண்ணெயின் கூட்டுத்தொகையை கண்டுபிடிக்க வேண்டும்.
3. விற்ற கடலை எண்ணெயின் கூட்டுத்தொகையை செக்கில் ஆட்டிக் கிடைத்த மொத்த எண்ணெயின் அளவிலிருந்து கழித்தால், நமக்கு விடை கிடைத்துவிடும்.

| விவரம் | கணக்கிடல் |
|---|---|
| கடந்த வாரம் செக்கில் ஆட்டி எடுத்த கடலை எண்ணெயின் அளவு | $77\frac{1}{2} \times \frac{3}{5} = \frac{155}{2} \times \frac{3}{5}$ |
| ஆட்டி எடுத்த கடலை எண்ணெயின் அளவு (எளிமைப்படுத்துகையில்) | $\frac{155 \times 3}{2 \times 5} = \frac{\overset{31}{\cancel{155}} \times 3}{2 \times \underset{1}{\cancel{5}}} = \frac{31 \times 3}{2 \times 1} = \boxed{\frac{93}{2}}$ |
| கடந்த வார நாட்களில் விற்பனை செய்த கடலை எண்ணெயின் அளவு | $3\frac{1}{4} + 5\frac{1}{2} + 8 + 2\frac{1}{4} + 6\frac{3}{4} + 11\frac{1}{2}$ |
| தகா பின்னங்களாக மாற்றி அவற்றை எளிமைப்படுத்துகையில் | $\frac{13}{4} + \frac{11}{2} + \frac{8}{1} + \frac{9}{4} + \frac{27}{4} + \frac{23}{2}$ |
| மீ.சி.ம கண்டுபிடித்து கூட்டுகையில் | $\frac{13+22+32+9+27+46}{4} = \boxed{\frac{149}{4}}$ |
| ஆட்டிக்கிடைத்த எண்ணெய்க்கும் விற்பனையான எண்ணெயின் கூடுதலுக்கும் உள்ள வித்தியாசம் | $\frac{93}{2} - \frac{149}{4} = \frac{186-149}{4} = \frac{37}{4} = \boxed{9\frac{1}{4}}$ |

கடந்த வார இறுதியில் விற்றது போக மீதியிருக்கும் கடலை எண்ணெயின் அளவு $\boxed{9\frac{1}{4}}$ (ஒன்பதேகால் லிட்டர்) ஆகும்.


## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Tuesday 15th February, 2022 :: 18:27 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.

https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**